**தலைப்பு 157 – தேசிய சக வாழ்வு, கலந்துரையாடல்கள் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆம் ஆண்டு**

தலைப்பு 157 – தேசிய சக வாழ்வு, கலந்துரையாடல்கள் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சின் 2016 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2017 யூலை 31 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பு**

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

அமைச்சிற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 672.26 மில்லியனாக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையில் இதில் ரூபா 452.10 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், அமைச்சிற்கு ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதிஏற்பாடுகளில் ரூபா 220.16 மில்லியன் அல்லது 32.74 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதிஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதிஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழுபவை | 363.25 | 327.39 | 35.86 | 9.87 |
| மூலதனம் | 309.01 | 124.71 | 184.30 | 59.64 |
| மொத்தம் | 672.26 | 452.10 | 220.16 | **32.74** |

**2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சிற்குரிய 15701 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| **செலவினம்** | | **பெறுவனவுகள்** | | **வரவு மீதி** | |
|---|---|---|---|---|---|
| **ஆகக் கூடிய எல்லை** | **உள்ளபடியானது** | **ஆகக் குறைந்த எல்லை** | **உள்ளபடியானது** | **ஆகக் கூடிய எல்லை** | **உள்ளபடியானது** |
| **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** | **ரூபா. மில்லியன்** |
| 18.00 | 15.45 | 6.50 | 7.46 | 60.00 | 30.10 |

**2.3 கட்டுநிதிக் கணக்கு**

அமைச்சின் கீழுள்ள 7002/0000/00/0362/0016/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 0.127 மில்லியன் கட்டுநிதி மீதி காணப்பட்டது.

**2.4 பொது வைப்புக் கணக்கு**

அமைச்சின் கீழுள்ள 02 பொது வைப்புக் கணக்குகளில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கூட்டுமொத்தமான மீதி ரூபா 43,579 ஆக இருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| **வைப்புக் கணக்கு இலக்கம்** | **2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி** |
|---|---|
| | **ரூபா** |
| 6000/0000/00/0013/0107/000 | 30,304 |
| 6000/0000/00/0018/0101/000 | 13,275 |
| மொத்தம் | **43,579** |

**2.5 கணக்காய்வு அவதானிப்புகள்**

தேசிய சக வாழ்வு, கலந்துரையாடல்கள் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையானதும் முக்கியத்துவம் வாய்ந்ததுமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை

திணைக்களத்தினால் கீழே காண்பிக்கப்படுகின்ற சில பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன், சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாக்கப்பட்டு பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (அ) | கணனிகள், உப பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | மின் உபகரணங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப் பிரமாணம் 454(2) | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | பெறுகைக் குழுவினதும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினதும் வருகைப் பதிவேடு | 2006 அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.11.2 வழிகாட்டல் | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | பொறுப்புக்கள் பதிவேடு | நிதிப் பிரமாணம் 214 | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | பொருட் பதிவேட்டுப் பதிவேடு | நிதிப் பிரமாணம் 454 | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை மற்றும் நிதிப்பிரமாணம் 502(2) | அமைச்சு மற்றும் அரசசார்பற்ற அமைப்புக்கள் தொடர்பான செயலகத்தின் பதிவேடுகள் நாளதுவரையாக்கப் பட்டிருக்கவில்லை. |
| (எ) | உறுப்பினர் கடன் பதிவேடு | நிதிப்பிரமாணம் 502 | நாளதுவரையாக்கப் பட்டிருக்கவில்லை. |

### 3.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### 3.2.1 பாதீட்டு முரண்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 02 மீண்டெழும் செலவின விடயங்களிற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 1,450,000 தொகை மற்றும் 03 மூலதனச் செலவின விடயங்களுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 50,900,000 மொத்தத் தேறிய நிதிஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 33 செலவின விடயங்களிற்கு மிகை நிதி ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தமை காரணமாக நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்திய பின்னர் சேமிப்பானது அந்த செலவின விடயங்களிற்குரிய தேறிய நிதி ஏற்பாடுகளில் 10 சதவீதம் முதல் 98 சதவீதம் வரையான வீச்செல்லையில் காணப்பட்டது.

**3.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று**

கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த இணக்கக் கூற்றின் பிரகாரம் அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 235,320 ஆக இருந்ததுடன், அந்நிலுவை கடன் மீதிகள் 4 ஆண்டுகள் முதல் 5 ஆண்டுகள் வரையான காலப்பகுதியிலிருந்து நிலவி வந்திருந்தது. அந் நிலுவை கடன் மீதிகளை அறவிடுவதற்கு அமைச்சு தவறியிருந்தது.

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

அமைச்சின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) 2014 சனவரி 01 ஆந் திகதி கிளிநொச்சி மாவட்ட செயலகத்திற்கு உரித்தான கட்டிடங்களுடன் கூடிய காணிப் பகுதியொன்று இந்த அமைச்சுக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன், 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் போது அந்தக் கட்டிடங்களை புனரமைப்பதற்காக முறையே 9,998,311 மற்றும் ரூபா 254,259 தொகை செலவிடப்பட்டிருந்தது. இக்காணி மற்றும் கட்டிடங்கள் மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) நிறைவேற்று மற்றும் கூட்ட மேசைகள், கதிரைகள் கொள்வனவின் போது அறவிடப்பட்ட வரி பெறுமதி மற்றும் குளிரூட்டிகள் பொருத்துதல் செலவினம் என்பவற்றை சொத்துக்களின் கிரயத்திற்கு உள்ளடக்கப்படாமையால் அலுவலக உபகரணங்களின் பெறுமதி ரூபா 557,505 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

3.5 **செயலாற்றல்**

2016 ஆம் ஆண்டின் பாதீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி அமைச்சின் செயன்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அரச சார்பற்ற அமைச்சுக்களில் மேற்பார்வை நடவடிக்கைகளுக்காக 21 மாவட்ட கூட்டிணைப்பாளர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். இந்த உத்தியோகத்தர்களின் செயலாற்றலை அளவிடுவதற்காக அச்செயலகத்தினால் தயாரிக்கப்பட்ட செயலாற்றல் அளவு நியதிகளின் பிரகாரம் செயலாற்றல் அறிக்கை பெற்றுக் கொள்ள வேண்டிய போதிலும் பின்தொடர் பிரிவு (Monitoring Unit) இனால் 2016 ஆம் ஆண்டிற்காக செயலாற்றல் அறிக்கை பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) அரச சார்பற்ற அமைப்புக்கள் தொடர்பான செயலகத்தின் கீழ் அரச சார்பற்ற 1500 அமைப்புக்கள் பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும், அனைத்து அமைப்புகளும் செயற்பாட்டு நிலமையில் காணப்படாததுடன், இதுவரை செயற்பாட்டில் காணப்படும் அமைப்புக்கள் 575 ஆக இருந்தன. இந்த அமைப்புக்களில் 175 மாத்திரம் அங்கீகரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டங்களை சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், எந்தவொரு அமைப்பொன்றினாலும் வருடாந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 2015-2017 அரச மொழிக்கொள்கையை செயற்படுத்துவதற்காக மத்திய கால மொழி பயிற்சி திட்டங்கள் உள்ளடக்கப்பட்ட செயற்பாடுகளில் செயன்முன்னேற்றம் 03 மாதங்களுக்கு ஒருமுறையும் வருடாந்தமும் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் செயன்முன்னேற்ற அளவீடொன்று அல்லது பின்தொடர் நடவடிக்கையொன்று இடம்பெற்றிருக்கவில்லை.

**3.6 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

தெரிவுப் பரிசோதனைகளில் வெளிப்படுத்தப்பட்ட சிக்கனமற்ற விதத்தில் மேற்கொண்டிருந்த கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**பெறுகை வழிகாட்டல் கோவைக்கு புறம்பாக செயற்படல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அமைச்சினால் தேசிய சக வாழ்வினை மேம்படுத்துவதற்காக ரூபா 1,459,120 செலவிடப்பட்டிருந்த 03 செயலமர்வுகளுக்காக இடங்களை தெரிவு செய்யும் போது 2006 பெறுகை வழிகாட்டல் கோவையின் 1.2.1 வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் ஊடகவியாலர்களை அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு சமூகமளிப்பவர்களுக்காக 285 மாநாட்டு கைப்பைகளை கொள்வனவு செய்வதற்கு ரூபா 411,961 செலவிடப்பட்டிருந்ததுடன் 2006 பெறுகை வழிகாட்டல் கோவையின் 1.2.1 வழிகாட்டலுக்கு புறம்பாக கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

**3.7 முகாமைத்துவ செயற்பாடுகள்**

வெளிநாட்டு விடுமுறை பெற்றுள்ள ஒருங்கிணைப்பு மேம்பாட்டு உதவியாளர் 2013 திசெம்பர் மாதத்தில் சேவைக்கு அறிக்கையிடப்படாததன் பேரில் விடுமுறைக்கு விண்ணப்பிக்கும் போது கையொப்பமிடப்பட்ட உடன்படிக்கை பத்திரத்தின் பிரகாரம் செலுத்த வேண்டிய ரூபா 97,400 தொகை கணக்காய்வு திகதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.8 மனித வள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 24 | 14 | 10 |
| (ii) | மூன்றாம் நிலை | 04 | 03 | 01 |
| (iii) | இரண்டாம் நிலை | 432 | 268 | 164 |
| (iv) | ஆரம்ப நிலை | 111 | 96 | 15 |
| | மொத்தம் | 571 | 381 | 190 |

வெற்றிடங்களாக காணப்படும் 164 இரண்டாம் நிலை பதவிகளுக்குரிய 32 அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகளும், 27 அரச முகாமைத்துவ உதவியாளர் பதவிகளும், 90 தேசிய ஒருங்கிணைப்பு கூட்டமைப்பாளர் பதவிகளும் உள்ளடங்கியிருந்தன.